(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 41.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2025 மார்ச் 15, சனிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ (டாக்டர்) ஜகத் விக்கிரமரத்ன,** சபாநாயகர்

**கௌரவ (டாக்டர்) ரிஸ்வி சாலி**, பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ (திருமதி) ஹேமாலி வீரசேகர**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ கலாநிதி ஹரினி அமரசூரிய,** பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) ஏ.எச்.எம்.எச். அபயரத்ன,** பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) கிரிஷாந்த அபேசேன,** விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர்

**கௌரவ அனுர கருணாதிலக்க,** நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர்

**கௌரவ குமார ஜயகொடி,** வலுசக்தி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) நலிந்த ஜயதிஸ்ஸ,** சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ (கலாநிதி) அனில் ஜயந்த,** தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ சட்டத்தரணி ஹர்ஷன நாணாயக்கார,** நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) உபாலி பன்னிலகே,** கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சர்

**கௌரவ பிமல் ரத்நாயக்க,** போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ ஆனந்த விஜேபால,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,** கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ விஜித ஹேரத்,** வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ எரங்க குணசேகர,** இளைஞர் விவகாரங்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **மஹிந்த ஜயசிங்ஹ,** தொழில் பிரதி அமைச்சர்

கௌரவ **மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) அருண ஜயசேகர,** பாதுகாப்பு பிரதி அமைச்சர்

கௌரவ **முனீர் முலாபர்,** தேசிய ஒருமைப்பாட்டு பிரதி அமைச்சர்

கௌரவ **(பேராசிரியர்) ருவன் ரணசிங்க,** சுற்றுலா பிரதி அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) சுசில் ரணசிங்ஹ,** காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர்

கௌரவ **சட்டத்தரணி சுனில் வடகல,** பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர்

கௌரவ **உபாலி சமரசிங்ஹ,** கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர்

கௌரவ **(கலாநிதி) ஹர்ஷண சூரியப்பெரும,** நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) மதுர செனெவிரத்ன,** கல்வி, உயர் கல்வி பிரதி அமைச்சர்

கௌரவ **அருண் ஹேமசந்திரா,** வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர்

---

**கௌரவ அபூபக்கர் ஆதம்பாவா**

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ சட்டத்தரணி யூ.பி. அபேவிக்ரம**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ எம்.கே. எம். அஸ்லம்**

**கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி**

**கௌரவ லக்ஸ்மன் நிபுண ஆரச்சி**

**கௌரவ (கலாநிதி) (செல்வி) கௌஷல்யா ஆரியரத்ன**

**கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க**

**கௌரவ அர்கம் இல்யாஸ்**

**கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை**

**கௌரவ (திருமதி) ஒஷானி உமங்கா**

**கௌரவ கயந்த கருணாதிலக்க**

**கௌரவ ரவி கருணாநாயக்க**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே**

**கௌரவ சமிந்த லலித் குமார**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி நிலந்தி கொட்டஹச்சி**

**கௌரவ மனோ கணேசன்**

**கௌரவ அஜித் கிஹான்**

**கௌரவ (டாக்டர்) ஜகத் குணவர்தன**

**கௌரவ (திருமதி) சமன்மலீ குணசிங்ஹ**

**கௌரவ டி.வீ. சானக**

**கௌரவ நலீன் பண்டார ஜயமஹ**

**கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன**

**கௌரவ திலித் ஜயவீர**

**கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர**

**கௌரவ ஜீவன் தொண்டமான்**

**கௌரவ சாமர சம்பத் தசநாயக**

**கௌரவ சுகத் வசந்த த சில்வா**

**கௌரவ சட்டத்தரணி சுசந்த தொடாவத்த**

**கௌரவ கிங்ஸ் நெல்சன்**

**கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்**

**கௌரவ ஸ்டெபனி பிரனாந்து**

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார**

**கௌரவ விஜேசிரி பஸ்நாயக்க**

**கௌரவ எஸ்.எம். மரிக்கார்**

**கௌரவ ருவன் மாபலகம**

**கௌரவ (கலாநிதி) நந்தன மில்லகல**

**கௌரவ ஆர்.எம். காமிணி ரத்நாயக்க**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ**

**கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹசாரா லியனகே**

**கௌரவ நயன வாசலதிலக**

**கௌரவ ருவன் விஜேவீர**

**கௌரவ தர்மப்ரிய விஜேசிங்ஹ**

**கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ**

**கௌரவ திலிண சமரகோன்**

**கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர**

**கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ.டி.சூரியபண்டார**

**கௌரவ சட்டத்தரணி அர்ஜுன சுஜீவ சேனசிங்ஹ**

**கௌரவ (டாக்டர்) ஜனக சேனாரத்ன**

**கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்**

**கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்**

**கௌரவ சந்திம ஹெட்டிஆரச்சி**

**கௌரவ சம்பிக ஹெட்டிஆரச்சி**

**கௌரவ தினிந்து சமன் ஹென்னாயக்க**

**கௌரவ (செல்வி) சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்திர**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. சமிந்த குலரத்ன, பதவியணிப் பிரதானி மற்றும் பாராளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகம்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. ***சபாநாயகரின் அறிவித்தல்கள்:*** *சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:—*

**I**

"கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மொஹமட் சாலி நழீம் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறக்கும் கடிதத்தை பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திற்குக் கையளித்துள்ளார் என்பதனையும், அதற்கேற்ப பத்தாவது பாராளுமன்றத்தின் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடமொன்று ஏற்பட்டுள்ளதென்பதனையும் பாராளுமன்றத்திற்கு அறிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். அக்கடிதம் தற்பொழுது பாராளுமன்றச் செயலாளர் நாயகம் அவர்களால் வாசிக்கப்படும்."

පාර්ලිමේන්තුව

*பாராளுமன்றம்*

**PARLIAMENT**

15.03.2025

**Secretary General,**
Parliament

**Resignation from the Position of Member of Parliament – M. S. Naleem (National List, Sri Lanka Muslim Congress)**

I hereby tender my resignation as a Member of Parliament, as I intend to contest the Local Authorities Election in 2025.

Please accept my resignation accordingly.

**Mohamed Sali Naleem, MP**

**II**

"கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி அவர்களால் கேட்கப்பட்ட வாய்மூல விடைக்கான வினாக்களின் ஒழுங்குமுறை பற்றி கவனத்தில் கொள்ளாது, அவை ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டு 2025.03.14 ஆம் திகதி எழுப்பிய விடயங்கள் தொடர்பாக தெளிவுப்படுத்த விரும்புகின்றேன்.

அதன்படி, நான் இவ்விடயம் சம்பந்தமாக சபை ஆவண அலுவலகத்திலிருந்து அறிக்கையொன்றைக் கோரிப் பெற்றுக்கொண்டுள்ளேன். அந்த அறிக்கையின்படி, அவரால் வினாக்கள் கையளிக்கப்பட்டுள்ள அதே ஒழுங்குமுறைக்கு அமைய ஒழுங்குப் பத்திரத்தில் அவரது வினாக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஆகையால், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி அவர்கள், வாய்மூல வினாக்களுக்கான விடைகள் நிரல்படுத்தப்பட்டிருந்தமை தொடர்பாக முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை என்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் எந்த ஒழுங்குமுறைக்கு அமைவாக தங்களின் வினாக்களை கையளிக்கின்றார்களோ அந்த ஒழுங்குமுறைக்கு அமைவாகவே அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களினதும் வினாக்கள் நியாயமான முறையில் ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்றும் இச்சபைக்கு அறிவிக்க விரும்புகின்றேன்."

**2. பத்திரங்கள் சமர்ப்பித்தல்:** (1) பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர், 2025 பெப்ரவரி 27 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2025 வரைவு மதிப்பீடுகளின் நிரல்களில் முன்மொழியப்பட்ட உத்தேச திருத்தங்களின் பட்டியலின் திருத்தங்களை சமர்ப்பித்தார்.

மேற்படி ஆவணம் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர், 2021 ஆம் ஆண்டுக்கான தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து அவ்வறிக்கை உரிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்:** வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் தவிசாளர் கௌரவ விஜித ஹேரத் அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட—

(i) 2022 ஆம் ஆண்டுக்கான இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் ஆண்டறிக்கை;

(ii) 2022 ஆம் ஆண்டுக்கான சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் ஆண்டறிக்கை;

(iii) 2023 ஆம் ஆண்டுக்கான இலங்கை சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் வருடாந்த அறிக்கை; மற்றும்

(iv) 2023 ஆம் ஆண்டுக்கான இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) பொலன்னறுவை, பெலேடியாவ, இல. 520 இல் வதியும் திரு. எச்.ஜி. சோமசந்திரவினது 2025.02.10 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ கிங்ஸ் நெல்சன் சமர்ப்பித்தார்.

(2) தலவதுகொட, உதுவம்கந்த வீதி, இல. 174/எஃப்/1 இல் வதியும் திரு. ஈ.ஏ.டி.என். தம்மிக எதிரிசூரியவினது 2025.02.14 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ (கலாநிதி) நந்தன மில்லகல சமர்ப்பித்தார்.

(3) நீர்கொழும்பு, சாந்த ஜோன்ஸ் வீதி, இல. 11 இல் வதியும் திரு. டப்ளியூ.சீ. நிசாந்த கொஸ்தாவினது 2025.01.20 ஆம் திகதியிடப்பட்ட மனுவை சம்பிக்க ஹெட்டிஆரச்சி சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. ஒதுக்கீட்டுச் சட்டமூலம் — (ஒதுக்கப்பட்ட இருபத்தோராவது நாள்):** குழுநிலையில் மேலும் பரிசீலிக்கப்பட்டது.

(குழுநிலையில்)

சபாநாயகர் தலைமை தாங்கினார்.

தலைப்பு 112

நிகழ்ச்சித்திட்டம் 01 (மீண்டுவரும் செலவினம்)

"நிகழ்ச்சித்திட்டம் 10/- ரூபாவினால் குறைக்கப்படுமாக" என கௌரவ ஹெக்டர் அப்புஹாமி பிரேரித்தார்.

மு.ப. 10.50 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

பி.ப. 1.00 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

பி.ப.2.37 மணிக்கு கௌரவ (கலாநிதி) (செல்வி) கௌஷல்யா ஆரியரத்ன தலைமை தாங்கினார்.

பி.ப. 4.21 மணிக்கு கௌரவ லக்ஸ்மன் நிபுண ஆரச்சி தலைமை தாங்கினார்.

பி.ப. 5.21 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

112 ஆம் தலைப்பின் 01 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மீண்டுவருஞ் செலவுக்கென ரூபா 1,190,000,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டம் 01 (மூலதனச் செலவினம்)

112 ஆம் தலைப்பின் 01 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மூலதனச் செலவுக்கென ரூபா 61,000,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தலைப்பு 112

நிகழ்ச்சித்திட்டம் 02 (மீண்டுவரும் செலவினம்)

112 ஆம் தலைப்பின் 02 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மீண்டுவருஞ் செலவுக்கென ரூபா 18,217,000,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டம் 02 (மூலதனச் செலவினம்)

112 ஆம் தலைப்பின் 02 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மூலதனச் செலவுக்கென ரூபா 1,995,000,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“குழு செய்து முடித்த பரிசீலனை பற்றித் தலைவர் சபைக்கு அறிவிப்பதுடன் குழு மீண்டும் கூடுவதற்கு அனுமதி கோருவாராக” என வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

குழு செய்து முடித்த பரிசீலனை பற்றி அறிவிக்கப்பட்டது. 2025 மார்ச் 17 ஆம் திகதி திங்கட்கிழமை குழு மீண்டும் கூடும்.

**6. இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை (2021 ):** வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் பிரேரித்த பிரேரணை,— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாத் துறைச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் கீழ் 2023.09.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை (2021 ):** வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் பிரேரித்த பிரேரணை,— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாத் துறைச் சட்டத்தின் 20(2) ஆம் பிரிவின் கீழ் 2024.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. இலங்கை சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் வருடாந்த அறிக்கை (2021 ):** வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் பிரேரித்த பிரேரணை,— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாத் துறைச் சட்டத்தின் 23 ( 4 ) ஆம் பிரிவின் கீழ் 2024.03.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் வருடாந்த அறிக்கை (2021):** வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் பிரேரித்த பிரேரணை,— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாத் துறைச் சட்டத்தின் 40(1) ஆம் பிரிவின் கீழ் 2024.02.09 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**10. இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் வருடாந்த அறிக்கை (2022 ):** வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் பிரேரித்த பிரேரணை,— 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, சுற்றுலாத் துறைச் சட்டத்தின் 40(1) ஆம் பிரிவின் கீழ் 2024.05.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**11. ஒத்திவைப்பு:** "இப்பாராளுமன்றம் தற்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்படி பாராளுமன்றம், பி.ப. 5.52 மணிக்கு பிரதிச் சபாநாயகர் 2025 பெப்ரவரி 21 ஆம் திகதிய சபைத் தீர்மானத்திற்கிணங்க, 2025 மார்ச் 17 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 9.30 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.